[திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்] [1999 மே 18

இந்திய தூதரகம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. தற்போது கடலில் அலை சீற்றமாக உள்ளதால் மீனவர்களை படகுடன் இந்திய கடல் எல்லைக்குக் கொண்டு வந்து இந்திய கடலோரக் காவல் படையிடம் ஒப்படைப்பதில் தாமதம் நேரிட்டுள்ளதாக இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. இந்த நான்கு தமிழக மீனவர்களையும் படகுடன் விரைவில் தமிழகத்திற்கு அழைத்து வருவதற்கு அரசு சீரிய முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது.

3. காணாமல்போன தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பகுதியில் இலங்கை அரசினால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளதால், அம்மீனவர்கள் காணாமல்போன நாளான 3-5-1999 முதற்கொண்டு அவர்களை தமிழகத்திற்கு மீட்டு அழைத்து வரப்படும் நாள்வரை தமிழக அரசால் நாளொன்றுக்கு, குடும்பம் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் உதவித் தொகை வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4. விதி 110-ன் கீழ் அறிக்கை

அரியலூரைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் தொடங்குவது குறித்து பரிந்துரைக்க முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் நியமனம் செய்யப்பட்டுள்ளது பற்றி முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 110-ன்கீழ் இங்கே வைக்கப்படுகின்ற அறிக்கை:

ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டம், ஏற்கெனவே நிர்வாக வசதி காரணமாக திருச்சி, கரூர், பெரம்பலூர் என்று மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இந்த மூன்று மாவட்டங்களில் பெரம்பலூர் மாவட்டம் தொடங்கப்படுவதற்கு முன்பே அந்த மாவட்ட தலைநகராக அரியலூரை வைத்துக்கொள்ளவேண்டும் என்று அந்தப் பகுதி மக்களும், பெரம்பலூரை வைத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தப் பகுதி மக்களும் போராடத் தொடங்கிவிட்டார்கள். அதுகுறித்து தொடர்ந்து இருபகுதி மக்களாலும் பலமுறை பந்த் வேலைநிறுத்தம்

போன்ற நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுவிட்டன. இரு மாவட்டத்தையும் சேர்ந்த பல்வேறு பிரிவு மக்களையும் நான் தலைமைச் செயலகத்திற்கே அழைத்து நாமக்கல் கவிஞர் மாளிகையில் 9-1-1997 அன்று பல மணி நேரம் செலவழித்து, இரு தரப்பினரிடையே ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்த முயற்சித்தபோதிலும் அது தற்காலிகமான அமைதியை ஏற்படுத்த உதவியதே தவிர அந்த மாவட்டத்தில் எந்த வளர்ச்சிப் பணிகளையும் நிறைவேற்ற முடியாத அளவிற்குப் பல சங்கடங்கள் தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டேயுள்ளன.

எனவே, இந்தப் பிரச்சினையிலே ஓர் அமைதியான சூழ்நிலையை இருபகுதி மக்களிடையேயும் ஏற்படுத்த வேண்டும் என்றால், அரியலூரைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு மாவட்டமும், பெரம்பலூரைத் தலைநகரமாகக் கொண்டு மற்றொரு மாவட்டமும் இயங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்று தெரிகின்றது. தற்போது கரூர் மாவட்டத்தில் மூன்றரை சட்டமன்றத் தொகுதிகளும், அரியலூர் பகுதியில் மூன்று சட்டமன்றத் தொகுதிகளும், பெரம்பலூர் பகுதியில் இரண்டு சட்டமன்றத் தொகுதிகளும் உள்ளன. இதில், திருச்சி மாவட்டத்திலுள்ள உப்பிலியாபுரம் தொகுதியை பெரம்பலூர் மாவட்டத்துடன் இணைத்துவிட்டால், கரூர், அரியலூர், பெரம்பலூர் ஆகிய மூன்று மாவட்டங்களுமே ஒவ்வொன்றும் தலா மூன்று தொகுதிகள் வீதம் பெற்று தனித் தனி மாவட்டங்களாகத் திகழும். இந்த முடிவை நடைமுறைப்படுத்திட அந்தப் பகுதியிலே உள்ள அனைத்துத் தரப்பினரையும் கலந்தாலோசித்து அரசுக்குப் பரிந்துரை தர, முதன்மை ஆணையரும், வருவாய் நிர்வாக ஆணையருமான திரு. பி.எஸ். பாண்டியன், ஐ.ஏ.எஸ். அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். அவரது அறிக்கையை மூன்று மாதங்களுக்குள் அரசு பெற்று முறையான அறிவிப்பை வெளியிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 9-55

5. தகவல் கோரல்

(அ) தாழ்த்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீடு பற்றிய வெள்ளை அறிக்கைக் கோருதல்

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....